**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | | 119)தற்போது பெய்த தொடர் கனமழையின் காரணமாக சேதமடைந்த சாலைகளை போர்க்கால அடிப்படையில் செப்பனிட உத்திரவு பிறப்பித்த தமிழக அரசுக்கு இம்மாமன்றம் தனது நன்றியினை தெரிவித்துக்கொள் கிறது. |
| 30.10.2014 | 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை (மா,ந.3) அரசாணை(எம்எஸ்) எண்.106, நாள் 01–09–2014 இல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதுகாப்பான சுகாதாரமான சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வை 2023 திட்டத்தின் கீழ் கழிவுநீர் மேலாண்மை(Septage Management) திட்டத்தினை செயல்படுத்த வரப்பெற்ற வழிகாட்டுதல் நெறிமுறைகள் தொடர்பான | 120) பதிவு செய்யப்பட்டுத |

| | | |
|---|---|---|
| | அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு** – மேற்படி அரசாணையினை மாமன்றம் பதிவு செய்யலாம். எச்1 / 9028 /2014 | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சியானது சஙகரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி ஆகிய 5 கிராம பஞ்சாயத்துகளை இணைத்து 05–08–2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 25–10–2011 முதல் 60 வார்டு பகுதிகளை உள்ளடக்கி புதிய உறுப்பினர்களை தேர்வு செய்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மொத்தப்பரப்பளவு 90.66 சதுர கி,மீஆகும்.<br><br>இம்மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைகாலஙகளில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேஙகும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால் வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ஒருஙகிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றினை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் சென்னை (TNUIFSL) மூலம் நியமனம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அதற்கான உத்தேச செலவினத்தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் (TNUSDP) மூலம் செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 / 9047 /2014 | 121)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சியின் மொத்தப்பரப்பளவு 90.66 சதுர கி,மீஆகும். 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 355717 ஆக இருந்து வருகிறது. மாநகராட்சி பகுதியின் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (City Development Project) செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றினை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் சென்னை (TNUIFSL) மூலம் நியமனம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அதற்கான உத்தேச செலவினத் தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் (TNUSDP) மூலம் செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 / 8473 /2014 | 122) அலுவலக குறிப்புபடி அனுமதிக்கப் பட்டது |
| | 4)இம்மாநகராட்சியின் 2012–2013ம் ஆண்டிற்குரிய கணக்குகள் முடித்து | 123)அலுவலக |

| | | |
|---|---|---|
| | உடனிகழ் தணிக்கைப்பிரிவு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறைக்கு அனுப்பப்பட்டதில் உதவி இயக்குநர், உடனிகழ் தணிக்கைத்துறை, தூத்துக்குடி தனது கடித ந.க.எண்.181/அ1/2013 நாள் 01.09.2014ல் மேற்கணக்குகளை சரி செய்து மீள அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. புதிய இயல்பு நிலை கணக்கு முறைப்படி 24 அட்டவணைகள், தேய்மானம் கணக்கிடுதல் சொத்தாக்கம் செய்தல் போன்றவற்றை கணக்கிட்டு ஆண்டுக்கணக்குடன் இணக்கம் செய்ய வேண்டியதிருப்பதாலும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கணக்குகளை சரி செய்து அனுப்ப வேண்டியதிருப்பதாலும் பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் இதற்கு முந்தைய ஆண்டுகளில் தனியார் கணக்கு பணியாளர் மூலம் முடிக்கப்பட்டுள்ளது போல் இவ்வாண்டும் 2012–2013 கணக்குகளை தனியார் கணக்கு பணியாளர் (consultant) மூலம் முடிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 50,000/–க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். பி1/7120/2014 | குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | 5)இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் ஆண், பெண் துப்புரவு பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், வாகன துலக்குனர்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2014ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழஙகப்பட வேண்டும். அரசாணை எண். 283 நாள் 18.06.1996ன் படி துணி வகைகளை 50% கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலும், 50% தமிழ்நாடு கதர் கிராம வாரியத்திலும் வாஙகுவதற்கும் அதற்கான உத்தேச செலவினமாக தொகை ரூ 10.00 (பத்து இலட்சம் மட்டும்) இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**குறிப்பு–** அனுமதிக்கலாம். எச்7/9249/2014 | 124) அலுவலக குறிப்பு படி அனுமதிக்கப் பட்டது |
| | 6)இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிகின்ற துப்புரவு பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், மலேரியா பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் போன்ற பணியாளர்களுக்கு 2014ம் வருடத்திற்கான காலனிகள் வழஙக உத்தேச செலவுத் தொகை ரூ 1.50 லட்சத்திற்கும் தூத்துக்குடி காதி நிறுவனத்திலிருந்து வாஙகவும் மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்4/9248/2014 | 125)அலுவலக குறிப்புபடி அனுமதிக் கப்பட்டது |
| | 7)தூத்துக்குடி மாநகராட்சி, பராமரிப்பில் உள்ள ராஜாஜி பார்க் அம்மா உணவகம், சிவந்தாகுளம் மகப்பேறு மையம், ராஜாஜி பார்க் சுகாதார அலுவலகம் ஆகிய இடஙகளில் மழை நீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. | 126) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 72079/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண்.82/14–15 | |
| | **8)**தூத்துக்குடி மாநகராட்சி, பராமரிப்பில் உள்ள மாவட்ட கருவூலம், மாநகராட்சி வணிகவளாகம் சமுதாயக்கூடம் நூலகக் கட்டிடம் (சஙகராபேரி) ஆகிய இடஙகளில் மழைநீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 104257/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 87/14 – 15 | 127) பதிவு செய்யப்பட்டது. |
| | **9)**தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சவேரியார்புரம் அம்மா உணவகம் தஙகம்மாள்புரம் பள்ளி முத்தையாபுரம் வார்டு அலுவலகம் ஆகிய இடஙகளில் மழை நீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 62679/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 86/14–15 | 128)பதிவு செய்யப்பட்டது |
| | **10)**தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள குருஸ்புரம் சமுதாயக்கூடம், புதிய பேருந்து நிலையம், வி.வி.டி மற்றும் ஜார்ஜ் ரோடு அம்மா உணவகம், ஆணையாளர் , பொறியாளர் மற்றும் மேயர் குடியிருப்பு ஆகிய இடஙகளில் மழை நீர் சேமிப்பு அமைப்பதற்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 238991/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 89/14–15 | 129)பதிவுசெய்யப்பட்டது |
| | **11)** இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. D. பாலாஜி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும், தனது வயது முதிர்ந்த தாயை உடனிருந்து கவனிக்க வேண்டியதிருப்பதாலும், திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணிமாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணபத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – இடமாற்றம் தொடர்பாக மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.<br><br>19163/12/சி2 | 130)திரு.D, பாலாஜி,இளநிலை உதவியாளர் என்பவரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படியாரை திருநெல்வேலி மாநகராசிக்கு பணிமாறுதல் செய்வதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ள |

| | | |
|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டது. |
| | 12)தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.3.2014ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு. கே. சுந்தரவேல் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டட சிறப்பு சேமநலநிதி தொகைக்குரிய வட்டி (ம) அரசு மாமனயத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விவரப்படி தனியருக்கு வழஙகப்பட் வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநல நிதி வட்டி தொகை ரூ 15507<br><br>2)நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழஙகல் (ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு) எண். 240 நாள் 08.08.2008ன் படி சிறப்பு சேம நலநிதி மான்யத் தொகை 10000<br>————<br>25507<br>———<br><br>மேற்கண்ட தொகை ரூ 25507/—ஐ (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரத்து ஐனூற்றி ஏழு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>சி2/270/2014 | 131) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | | 132) 05–03–2014 அன்று காலமான 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ச. வெள்ளப்பாண்டி அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : .10.2014

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி